

# பல்கலாசார சமூகமொன்றில் நற்பிரசையாக வாழ்தல் 08

பல்வேறு மனிதக் குழுக்களால் மனித சமூகமொன்று உருவாகின்றது. அவர்கள் பேசும் மொழி, பின்பற்றும் சமயம், பழக்கவழக்கங்கள், உற்பத்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் கலாசாரம் உருவாகின்றது. சமூகத்திற்கு சமூகம் மொழி, சமயம், பழக்கவழக்கங்கள் போன்றவற்றில் வேறுபாடுகள் காணப்படும். இத்தகைய வேறுபாடுகளை உள்ளடக்கிய சமூகம் பல்கலாசார சமூகம் எனப்படுகிறது. மனித சமூகத்தின் நிலைபேறிற்கும் அபிவிருத்திக்கும் சமாதான சகவாழ்வு அவசியமாவதோடு அதற்குப் பல்கலாசாரமும் உதவுகின்றது. இதன்படி பார்க்கும் போது இலங்கைச் சமூகம் பல இனங்களையும், மொழிகளையும், சமயங்களையும் கொண்டது. இவர்களிடையே பல்வேறுபட்ட கலாசார அம்சங்கள் காணப்படுகின்றன. பல்கலாசார மனித சமூகமொன்றின் பிரசை என்ற வகையிலே ஒற்றுமையாக வாழ்ந்து இலங்கையர் என்ற தனித்துவத்தைப் பேணுவதற்குத் தேவையான தேர்ச்சியை இவ்வலகைக் கற்பதனூடாக நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

## 8.1 பல்கலாசார சமூகமொன்றின் அடையாளங்கள்

கலாசாரங்கள் பல சேர்ந்து பல்கலாசார சமூகமொன்று உருவாகின்றது. இத்தகைய சமூகமொன்றின் அடையாளங்களை இனங்காண்பதற்கு கலாசாரம், சமூகம் என்னும் எண்ணக்கருக்கள் பற்றி ஒரளவு விளங்கிக்கொள்வது முக்கியமாகும்.

நமது அன்றாட வாழ்க்கையில் 'சமூகம்' என்ற சொல்லை அடிக்கடி கேட்கிறோம், வாசிக்கின்றோம், பேசுகின்றோம். எமது வாழ்க்கையில் சாதகமாகவோ, பாதகமாகவோ தாக்கத்தை ஏற்படுத்தும் எல்லா நபர்களும் அடங்கிய மானிடக்குழு மனித சமூகம் என எளிமையாகக் குறிப்பிடலாம். இச் சமூகத்தில் நீங்களும் ஒரு அங்கத்தவர் ஆவீர்கள்

கலாசாரம் என்பது மனிதர்கள் ஏற்படுத்திக் கொண்ட பழக்கவழக்கங்கள், மொழி, சமயம், ஆற்றல்கள், அறிவுவகைகள், நம்பிக்கைகள், எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் போன்ற அம்சங்கள் அடங்கிய ஒரு கூட்டான செயற்பாடாகும். இக் கலாசாரத்தில் உள்ளடங்கும் அம்சங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. சமயம்
2. மொழி
3. குடும்பப்பின்னணி

4. பொருளாதாரப் பின்னணி
5. நம்பிக்கைகள்
6. சடங்கு சம்பிரதாயங்கள்
7. மனப்பாங்கு
8. அரசியல்
9. கல்வி
10. தொழினுட்பம்

மேற்கூறப்பட்ட அம்சங்கள் நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம், காலத்திற்குக் காலம் வேறுபடும். ஆகையால் ஒரு கலாசாரம் ஒரு பிரதேசத்திலோ ஒரு நாட்டிலோ மட்டும் இருக்க வேண்டிய அவசியமில்லை என்பது தெளிவாகின்றது.

கலாசாரம் பற்றிப் பல்வேறு தத்துவஞானிகள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்துள்ளார்கள்.

**இலக்கியத்திற்கும் வரலாற்றிற்கும் கலைக்கும் அடிப்படையான ஒன்றாகக் கலாசாரம் கருதப்படுகிறது.**

**பேட்ரன்ட் ரசல்**

***கலாசாரம் தனிப்பட்ட ரீதியில் உருவாக்கப்பட்ட படைப்பு ஒன்றல்ல.***

***க்லோட் லெச் ஸ்ட்ரவுஸ் ~ பிரான்ஸ் மானிட விஞ்ஞானி***

உலகின் பெரும்பாலான நாடுகளில் பல்வேறு இனமக்கள் வாழ்கிறார்கள். மேலும் அவர்களுக்கிடையிலே பல்வேறு நம்பிக்கைகள், சமயங்கள், மொழிகள், பழக்கவழக்கங்கள் மற்றும் கலைகளும் கூட ஒன்றுக்கொன்று வேறுபடுவதோடு ஒத்த அம்சங்களும் உள்ளன. உதாரணத்திற்கு இந்தியாவை எடுத்துக்கொள்வோம். அங்கு குஜராத்திகள், தமிழர்கள், வங்காளிகள், முஸ்லிம்கள் எனப் பல இனத்தவர் வாழ்கிறார்கள். இவர்கள் பல்வேறு மொழிகளைப் பேசுகின்றனர். வேறுபட்ட சமயங்களையும் பின்பற்றுகிறார்கள். அவர்களின் கலாசாரங்களும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. எனினும் அவர்கள் அனைவரும் இந்தியர்கள் என்ற ஒரு நாட்டவராகவே கருதப்படுகின்றனர். இதே போல இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இவ்வாறு பல இனமக்களைக் காணலாம்.

உலகின் பிரதான சிறப்பம்சமே பல்வகைமை ஆகும். ஒரே இனத்திலும் கூடப்பல்வேறு கலாசாரங்களைக் காணலாம். ஒரே நாட்டிலே ஒரே இனத்திலே அப்பல்வகைத் தன்மையை இனங்கண்டு ஒரே குடும்பமாகச் செயற்படுவது உலகத்தாருக்கிடையே காணப்படும் சவாலாகும்.

இலங்கைச் சமூகமானது பல்வேறு இனங்கள், மொழிகள், சமயங்கள் உட்படப் பல்வேறு பிரதேசங்களில் வாழும் மானிடக் குழுக்களால் ஆனது. எனவே எமது நாட்டிலே பல்வேறு கலாசாரங்களைக் காணலாம். இக்கலாசாரங்களுக்குச் சொந்தமான பிரசைகள் ஒன்றாகவே வாழ்கிறார்கள். அன்றாட தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகப் பல்வேறு கலாசாரத்திற்குச் சொந்தமான பிரசைகளின் உதவி கிடைக்கிறது. சேவை வழங்கலிலோ, சேவை பெற்றுக்கொள்வதிலோ எவ்வித வேறுபாடுகளும் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. ஆகையால் எமது சமூகம் பல்வேறு கலாசாரத்திற்குச் சொந்தமானவர்களைக் கொண்டு உருவானதாகும். இவர்கள் அனைவரும் இலங்கையர் ஆவர். இவ்வாறான சமூகமே பல்கலாசார சமூகம் என அழைக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட விடயங்களை நோக்கும்போது பல்கலாசார சமூகமொன்றிலே காணக்கூடிய பிரதான அம்சங்கள் இரண்டை இனங்காணலாம்.

| ஒருமைப்பாடு | பல்வகைமை |
|---|---|
| வாழும் நாடு | மொழி |
| நிர்வாகக் கட்டமைப்பு | சமயம் |
| சேவை வழங்கலும் சேவை | பழக்கவழக்கங்கள் |
| பெற்றுக்கொள்ளலும் | சடங்கு சம்பிரதாயங்கள் |
| தேசியகீதம், தேசியக்கொடி | ஆடையணிகள் |
| தேசிய உரிமைகள் | இலக்கியம், கலை |

**செயற்பாடு I**

இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் பல்வேறுபட்ட கலாசாரங்கள் உருவாகியதற்குக் காரணமான காரணிகளைப் பட்டியற்படுத்துங்கள்

## 8.2 இலங்கையின் பல்கலாசார சமூகம்

இலங்கைச் சமூகமானது. கலாசாரப் பன்மைத் தன்மை காணப்படுவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வாறு பல்கலாசாரம் காணப்படுவதற்கு இரண்டு காரணங்கள் அடிப்படையாகும்.

(1) இலங்கை 2500 வருடகால நீடித்த வரலாற்றை உடையது

(2) நாட்டின் அமைவிடம்

பின்வருமாறு இலங்கையில் கலாசாரப் பன்மைத்தன்மை வெளிப்படுவதை நீங்கள் அவதானிக்கலாம்.

- பல இனங்கள் காணப்படுகின்றன.
- பல சமயங்கள் காணப்படுகின்றன.
- வெவ்வேறு மொழிகள் பேசப்படுகின்றன
- பல வாழ்வாதார நடவடிக்கைகள் காணப்படுகின்றன.
- பல சமூகப் பிரிவினர் காணப்படுகின்றனர்.

## ★ இனரீதியான பல்வகைமை

இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலேயர், பறங்கியர் எனப் பல்வேறு இனத்தவர்களும் வாழ்கிறார்கள். பெருமளவு சிங்கள மக்களும் அடுத்து முறையே தமிழர்களும் முஸ்லிம்களும் மலேயர் பறங்கியர்களும் நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்கள் அனைவரும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பிரசைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். இங்கு வாழும் நாம் அனைவரும் எமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பணியாற்ற வேண்டியது அவசியமாகும்.

**இலங்கையின் சனத்தொகை**

| இனம் | சதவீதம் |
|---|---|
| சிங்களவர் | 74.0% |
| இலங்கைத்தமிழர் | 12.6% |
| மலையகத்தமிழர் | 5.5% |
| முஸ்லிம்கள் | 7.1% |

**மூலம்** **en.wikipedia.com**

## ★ சமயரீதியான பல்வகைமை

இலங்கையில் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயங்களைப் பின்பற்றுவோர் காணப்படுகின்றனர். சிங்களவர்களில் பெரும்பாலானோர் பௌத்த சமயத்தையும் குறைந்தளவினர் கிறிஸ்தவ சமயத்தையும் பின்பற்றுகின்றனர். தமிழர்களில் பெரும்பாலானோர் இந்து சமயத்தையும் ஏனையவர்கள் கிறிஸ்தவ சமயத்தையும் பின்பற்றுகிறார்கள். கிறிஸ்தவ சமயத்திலும் பல்வேறு பிரிவுகள் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் எல்லோரும் இஸ்லாமிய சமயத்தையே பின்பற்றுகிறார்கள். சிங்கள பௌத்தர்களுள் இந்துக்கடவுளை வழிபடுவோரும் இருக்கின்றனர்.

**இலங்கையின் சனத்தொகை சமயரீதியாக - 2007**

| சமயம் | வீதம் |
|---|---|
| பௌத்தம் | 73.7% |
| இந்து | 10.9% |
| கிறிஸ்தவம் | 6.2% |
| இஸ்லாம் | 7.6% |
| ஏனையவை | 1.6% |

### ★ மொழிப் பல்வகைமை

இலங்கையில் சிங்களமொழி, தமிழ்மொழி, ஆங்கிலமொழி என்பன பயன்படுத்தப்படுகின்றன. சிங்களமும், தமிழ்மொழியும் அரசகரும மொழிகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆங்கிலமொழிக்கும் முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சனத்தொகையில் சிங்கள மக்கள் அதிகமாகக் காணப்படுவதனால் சிங்களமொழி பேசுவோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது. தமிழர்கள் தமிழ்மொழியிலேயே பேசுவதோடு முஸ்லிம்களில் அதிகமானோர் தமிழ்மொழியையே பயன்படுத்துகின்றனர்.

### ★ வாழ்வாதாரப் பல்வகைமை

இலங்கை மக்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கென முக்கிய வாழ்வாதார மூலங்களாக விவசாயம், மீன்பிடி, வர்த்தக சேவைகள், சிறுகைத்தொழில்கள் என்பன காணப்படுகின்றன. இலங்கையில் காணப்படும் மக்கள் எல்லோரும் இன, மொழி, மத வேறுபாடின்றி எல்லாத்துறைகளிலும் ஈடுபட்டுத் தமது வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்ளுகின்றார்கள்.

### ★ பிரதேசப் பல்வகைமை

இலங்கைச் சமூகத்தில் பிரதேச ரீதியான பல்வகைமையையும் காணமுடியும். கண்டியச் சிங்களவர், கரையோரச் சிங்களவர், யாழ்ப்பாணத்தவர், மட்டக்களப்பைச்சேர்ந்தவர், மலையகப் பகுதியைச் சேர்ந்த இந்தியத் தமிழர்கள் என நோக்க முடிகின்றது. பிரதேசரீதியாக நோக்கும் போது ஒரேமொழியைப் பேசுபவர்கள் கூடப் பிரதேசத்திற்குப் பிரதேசம் வித்தியாசமாகப் பேசுவார்கள். அதேபோல ஆடை அணிகள் அணிவதிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதுமட்டுமன்றிப் பழக்கவழக்கங்கள், உணவுமுறை, பிரதேச சட்டதிட்டங்கள் என்பனவும் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுவதனை அவதானிக்கலாம்.

## 8.3 பல்வேறு கலாசாரப்பாரம்பரியங்களும் விழாக்களும்

கலாசாரம் ஒரே முறையில் தோன்றியதல்ல. கலாசாரமானது மக்களால் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டுவரும் பழக்க வழக்கங்களுக்கு அமையக் கட்டியெழுப்பபட்டது. தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வருவதுமாகும். நம்மிடம் உள்ள பழக்கவழக்கங்களுக்கும் கூட நீண்ட கால வரலாறுகள் இருக்கின்றன.

பல்வகைமை கொண்ட சமூகத்தில் இனரீதியாக, மொழிரீதியாக, மதரீதியாக, பிரதேச ரீதியாக மக்கள் பிரிவினர் காணப்படுவர். ஒவ்வொரு பிரிவினருக்குமுரிய பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள், விழாக்கள் வேறுபட்டுக் காணப்படலாம்.

பல்வகைமைச் சமூகத்தில் ஒவ்வொரு சமூகமும் ஏனைய சமூகங்களின் பழக்க வழக்கங்கள் சம்பிரதாயங்கள், விழாக்களுக்கு மதிப்புக் கொடுத்து, சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு புரிந்துணர்வுடன் நடக்கும்பொழுது பல்வகைமைத் தன்மை கொண்ட கலாசாரங்களை உள்ளடக்கிய சமூகம் நிலை பேறுடையதாகத் தொடர்ந்து இருக்கும்.



**உரு 8.1 பெற்றோரை வணங்குதல்**

## 8.4 பல்வேறு இனங்களுக்குரிய பழக்கவழக்கங்களும் சம்பிரதாயங்களும்

பல்வேறு இனங்களுக்கிடையிலே சமய அல்லது வேறு கலாசார நோக்கத்தை மையமாகக் கொண்டு பழக்கவழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் பேணப்படுகின்றன. இந்த சம்பிரதாயங்கள், சடங்குகளுக்கு நீண்ட வரலாறு உண்டு. பெரும்பாலான பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் சமய மற்றும் சமூக நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உருவானவை ஆகும்.



**உரு 8.2 வருடப் பிறப்பின் போது உணவு தயாரித்தல்**

பல்வேறு இனங்களினது சடங்குகள், சம்பிரதாயங்கள் பொதுவாகப் பின்வரும் சில நிகழ்வுகளின் போது கடைப்பிடிக்கப்படுவதை நாம் அவதானிக்கலாம்.

- தாய் கருவுற்று இருக்கும் பொழுது.
- குழந்தையின் பிறப்பின்போது
- முதன்முதல் குழந்தைக்கு உணவு ஊட்டும்பொழுது
- கல்வி நடவடிக்கை ஆரம்பிக்கும் பொழுது (ஏடு தொடக்குதல்)
- பருவமடைதல்
- திருமண வைபவம்
- புதுவீடு கட்ட ஆரம்பிக்கும்போது

- புதுவீடு புகும்பொழுது (புதுமனை புகுதல்)
- மரணச்சடங்கின் போது

மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை பல்வேறு வகையான சடங்குகள், சம்பிரதாயங்களுக்கு உட்பட்டே வாழ்கின்றனர். எல்லாச் சமூகங்களும் மேலே கூறப்பட்ட எல்லா நிகழ்வுகளின் போதும் சடங்குகள், சம்பிரதாயங்களைப் பின்பற்றுகின்றன என்று கூறிவிட முடியாது. ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு முறைகளில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தத்தமது சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வுகளின் போது சடங்குகள், சம்பிரதாயங்களைப் பின்பற்றுகின்றன. இவ்வாறு பின்பற்றுவதனூடாக ஒவ்வொரு சமூகமும் தமது தனித்துவத்தை வெளிக் காட்டுகின்றன.

**★ இலங்கையின் கலாசாரங்கள் பின்வருமாறு அழைக்கப்படுகின்றன.**

i பௌத்த கலாசாரம்

ii இந்து கலாசாரம்

iii இஸ்லாமிய கலாசாரம்

iv கிறிஸ்தவ கலாசாரம்

மேற்படி கலாசாரங்கள் சமய அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டவையாகும். இதனால் இக்கலாசாரங்களில் இடம்பெறும் பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் என்பவற்றில் சமயங்களின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுவதனை அவதானிக்கலாம்.

**★ பௌத்த கலாசாரத்தோடு இணைந்த சமய விழாக்களும் சம்பிரதாயங்களும்**


இலங்கைப் பௌத்தர்களின் கலாசாரம் சிங்கள பௌத்த கலாசாரம் எனப்படும். சிங்களவர்களுக்கு தம் வாழ்க்கையைக் கட்டியெழுப்பத் தேவையான போதனைகள், அறிவுரைகள் என்பன கிடைப்பது பௌத்தம் கற்பித்தலின் ஊடாகவே ஆகும். காலை, மாலை புத்தபகவானுக்கு விளக்கேற்றி மலர் பூசை செய்வது பௌத்தர்களின் நாளாந்த சமய நடைமுறையாகும். பஞ்சசீல கொள்கைகளைப் பேணி, பஞ்சமா பாதகங்களைத் தவிர்த்து தம் வாழ்க்கையை பௌத்தர்கள் கொண்டு நடாத்துகின்றனர்.

**★ பௌத்த சமய விழாக்கள் சில**

- வெசாக்
- பொசன்
- எசல

இவை தவிர இன்னும் பல பௌத்த சமய விழாக்கள் பௌத்தர்களால் கொண்டாடப்படுகின்றன.


### ★ வெசாக்



உரு 8.3 புத்தரின் மூன்று நிலைகள்

புத்த பெருமானின் பிறப்பு, ஞானோதயம், பரிநிர் வாணம் ஆகிய மூன்றையும் மையமாக் கொண்டு பௌத்தர்கள் வெசாக் கொண்டாடுகிறார்கள். இம் மூன்றையும் உள்ளடக்கிய நிலையை நீங்கள் அருகிலுள்ள படத்தில் காணலாம். அன்றைய தினம் அன்னதானம், தியானம் ஆகிய கருமங்களில் ஈடுபடுவர். புத்தபகவானுக்கு மலர்ப் பூசை செய்து, வீடு, விகாரை, பாடசாலை, வீதி ஆகியவற்றை அலங்கரித்து உள்ளத்தாலும் செயலாலும் புத்த பெருமானை வழிபாடு செய்வர்.

### ★ பொசன்



உரு 8.4 மிகிந்தல

இலங்கைக்கு மஹிந்த தேரர் புத்த சமயத்தைத் கொண்டுவந்ததை நினைவு கூருமுகமாக இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் உள்ள பௌத்தர்கள் பொசன் கொண்டாடுகின்றனர். இக்கொண்டாட்டத்தின் போது மஹிந்ததேரரின் உருவச்சிலையை, ஊர்வலமாக (பெரஹெர) எடுத்துச் செல்வது பௌத்தர்களின் வழக்கமாகும். விசேடமாக அனுராதபுரம், மிகிந்தலை மற்றும் நாட்டின் சகல விகாரைகளிலும் மஹிந்த தேரரை ஞாபகப்படுத்திக் கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்கிறார்கள். இவ்வாறு செய்வதனை மஹிந்த தேரருக்குச் செய்யும் நன்றியாகவே கருதுகிறார்கள்.

### ★ எசல



உரு 8.5 தலதா பெரஹெரா

காலம் காலமாக புத்தரின் புனித தந்தத்திற்குப் பூசை நடத்தும் முகமாக கண்டி ஸ்ரீ தலதா பெரஹெராவை பௌத்தர் நடாத்துவர். எசல ஆடி மாதத்திலே புத்த பெருமானை நினைத்து நாடுபூராவும் உள்ள விகாரைகளில் அன்னதானங்கள், தியானங்கள் மற்றும் புண்ணிய கருமங்களில் ஈடுபடுகிறார்கள்.

## ★ பௌத்த சமயச் சடங்குகளும் சம்பிரதாயங்களும்

பிறப்பு முதல் இறப்புவரை பல்வேறு சமயச் சடங்குகள் பௌத்தர்களால் பின்பற்றப்படுகின்றன. குழந்தை பிறந்த பின் விகாரைக்குச் சென்று புத்தரை வழிபட்டு வேண்டுதல்கள் செய்யும் சடங்கை நிறைவேற்றுவார்கள்.



உரு 8.6 சிங்கள-பௌத்த திருமணம்

திருமணச் சடங்கின் போது மணமகளின் வீட்டாரும் மணமகனின் வீட்டாரும் இணைந்து மணமேடைச் சடங்குகளை நிறைவேற்றுவர். ஜயமங்கல கீதம் இசைத்து மணமக்களை பௌத்த சமயப்படி ஆசீர்வதிப்பர்.



உரு 8.7 தானம் வழங்குதல்

மரணச்சடங்கின் போது பிக்குமாரை அழைத்து வாழ்க்கையின் நிலையில்லாத் தன்மை பற்றி தர்ம உபதேசம் கேட்டு பிக்குமாருக்குப் அங்கிகளை வழங்கி மரணித்தவருக்கு புண்ணியம் சேர்க்கும் பௌத்த சடங்கை நிறைவேற்றுவர். ஏழு நாட்களின் பின்னர். பிக்கு ஒருவரைக் கொண்டு ஞாபகார்த்தமாக தர்ம உபதேசம் செய்து, பின்னர் பிக்குமாருக்குத் தானம் வழங்கி மரணித்தவருக்குப் புண்ணியம் சேர்ப்பர்.

### செயற்பாடு II

பௌத்த சடங்குகள், சம்பிரதாயங்கள் பழக்கவழக்கங்கள் பற்றித் தேடி அறிந்து அறிக்கையொன்றைத் தயாரியுங்கள்.

## இந்து கலாசாரத்தோடிணைந்த சமய விழாக்களும் சடங்கு சம்பிரதாயங்களும்

இந்து சமய மக்களின் வாழ்க்கை முறை வேத, ஆகமங்களை அடித்தளமாகக் கொண்டதாகும். அவர்களின் விழாக்களும், சடங்கு சம்பிரதாயங்களும் அவர்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்ததாகக் காணப்படுகின்றன. வேதங்கள் மற்றும் இதிகாச புராணங்கள் கூறும் செய்திகளை அடியொட்டி உருவாக்கப்பட்டதே இந்து கலாசாரமும் அதனோடு இணைந்த பழக்க வழக்கங்களுமாகும்.

**இந்து சமய விழாக்கள் சில**

- தைப்பொங்கல்
- தீபாவளி
- மஹா சிவாராத்திரி

## ★ தைப்பொங்கல்



உரு 8.8



உரு 8.9

அறுவடை முடித்து நெற்குவியல்களைக் காண்பதால் உழவர்களது மகிழ்ச்சி பெருகும். உழவுத் தொழிலுக்கு உதவுபவன் சூரியன். எனவே சூரியனுக்கு நன்றி தெரிவிப்பதற்காகத் தைப்பொங்கலைக் கொண்டாடுவர். அன்றைய தினம் அதிகாலை எழுந்து நீராடி புத்தாடை அணிவர். வீட்டின் தலைவாசலிலும் முற்றத்திலும் மாவிலைத்தோரணம் கட்டி அலங்கரிப்பர். புதிய பானையிலே புதிய அரிசி கொண்டு பாலும் சர்க்கரையும் இட்டு பொங்கலையாக்குவர். தீப தூப ஆராதனையோடு சூரியனை வழிபடுவர்.

தைப்பொங்கலுக்கு அடுத்தநாள் தமிழர்களால் பட்டிப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது. உழவுத்தொழிலுக்கு உதவுவது மாடு. எனவே அவற்றுக்கு நன்றி செலுத்தும் முகமாகத் தம்மிடமுள்ள மாடுகளைக் குளிப்பாட்டி, மாலைகளும் பொட்டுமிட்டு அலங்கரிப்பர். மாடுகளின் கொம்புகளுக்கு வண்ணச்சாந்து பூசுவதுமுண்டு. பின்னர் பட்டியிலே பொங்கலாக்குவர். அதனைத் தலைவாழையிலையிலே படைத்து வழிபாட்டில் ஈடுபடுவர். அப்பொங்கலைத் தமது பசுக்களுக்கும் காளைகளுக்கும் உண்ணக் கொடுத்துத் தாமும் உறவினரோடு உண்டு மகிழ்வர்.

### ★ தீபாவளி



உரு 8.10 தீபமேற்றப்பட்ட காட்சி

நரகாசுரன் என்ற கொடும் அசுரனை கிருஷ்ண பகவான் அழித்த தினத்தைக் கொண்டாடுவதே தீபாவளி ஆகும். தீபங்களை வீடுகளிலும், கோயில்களிலும் ஏற்றிக் கொண்டாடுவதனாலேயே தீபாவளி எனப்படுகிறது. தீபாவளி நாளில் அதிகாலையில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வார்கள். புத்தாடைகள் அணிந்து கோவில் களுக்குச் சென்று விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வர். இத்தினத்தில் விசேட தீபாவளி உணவுப் பண்டங்கள் தயாரித்து நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் விருந் தளித்துக் கொண்டாடுவது இந்துக்களின் வழக்கமாகும்.

### ★ மஹா சிவராத்திரி



உரு 8.11 சிவனும் பார்வதியும்

சிவபெருமானிடம் இருந்து அருளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக விரதம் அனுஷ்டித்து இரவு முழுவதும் விழித்திருந்து வழிபாடுகளில் ஈடுபடுவது மகா சிவாத்திரி எனப்படும். இது மாசிமாதத்தில் சைவ மக்களால் கொண்டாடப்படுகின்றது. இது சைவ மக்கள் அனுஷ்டிக்கும் விரதங்களில் மிகவும் முக்கியமானதொன்றாகும்.

### ★ இந்து சமய சடங்குகளும் சம்பிரதாயங்களும்

இந்து சமயத்தைச் சேர்ந்த தமிழர்கள் தமது வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சடங்குகள் சம்பிரதாயங்களைப் பின்பற்றுகிறார்கள். குழந்தை பிறந்து 31 நாட்களின் பின் குழந்தைக்கு பெயரிடுவார்கள். குழந்தையின் தாய்மாமன் அல்லது ஒரு பெரியவர் குழந்தையின் பெயரை அதன் வலது காதில் ஓதுவர். பின்னர் மற்றவர்கள் எல்லோரும் குழந்தையின் பெயரைச் சொல்லி அழைத்து மகிழ்வர்.

குழந்தை பிறந்த 41ம் நாள் தாயையும் குழந்தையையும் கோயிலுக்குக் கொண்டு போவார்கள். இங்கு குழந்தையைத் தெய்வ சந்நிதானத்தில் காணிக்கையாக வைத்து வழிபடுவார்கள். ஏடுதொடக்குதல் என்ற சடங்கும் மற்றொரு முக்கியமான சடங்காகும். ஏடு தொடக்குதல் என்பது கல்வியைத் தொடங்குதல் என்பதாகும். கோயிலில் அல்லது வீட்டில் கும்பம் வைத்து பூசை வழிபாடு செய்து கல்வியைத்



உரு 8.12 இந்து திருமண சடங்கு

தொடங்குவார்கள். எந்தக் கருமத்தையும் தொடங்குவதற்கு முன்பும் பிள்ளையாருக்கு முதல் வணக்கம் செய்வது இந்துக்களின் வழக்கமாகும். செய்யப்படுகின்ற காரியங்கள் தடை ஏற்படாமல் காக்க வல்ல கடவுள் பிள்ளையார் என்பது இந்துக்களது நம்பிக்கையாகும்.

இந்துக்களின் திருமணத்தின் போது பல சடங்குகள் காணப்படுகின்றன. பொன்னுருக்கல், தாலிகட்டுதல், கெட்டிமேளம் கொட்டுதல், கன்னி காதானம், மாலை மாற்றுதல், அம்மி மிதித்தல், கணையாழி எடுத்தல், அருந்ததி காட்டல் போன்ற பல சடங்குகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு செயல்களுக்கும் அறிவியல் ரீதியான காரணங்கள் உண்டு.

உதாரணமாக மணமகன் மணமகளுக்கு தாலிகட்டும் பொழுது கெட்டிமேளம் கொட்டுவார்கள். ஏதாவது ஒரு மூலையில் யாரோ யாரையோ அமங்கலமாய்த் திட்டிக்கொண்டிருந்தால் அத்தகைய வார்த்தைகள் மணமக்களின் காதுகளில் விழக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு செய்வர். இதேபோல் அம்மி மிதித்தலின் நோக்கம் பெண்ணானவள் கல்லைப்போல உறுதியுடன் மனம் தளராது தன்னுடைய கற்பு நிலையினின்றும் பிரியாமலும் கணவனிற் பற்று நீங்காமலும் இருக்க வேண்டும் என்பதாகும்.

ஒருவர் இறந்துவிட்டால் மரணச் செய்தியை ஊருக்கு அறிவிப்பதற்காகப் பறை அடிக்கும் வழக்கம் காணப்படுகிறது. இறந்தவரின் உடலைத் தெற்கே தலை இருக்கும்படி கிடத்துவார்கள். இவ்வாறு செய்வது வடக்குத்திசையில் தலை இருக்கும்படி இருந்தால் உடலுக்கு கெடுதல் ஏற்படும் என்ற நம்பிக்கையினாலாகும்.

### செயற்பாடு III

இந்து சமயச் சடங்குகள், சம்பிரதாயங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் தேடியறிந்து நூல் ஒன்றை ஆக்குக.

## ★ முஸ்லிம்களின் பண்டிகைகளும் சடங்குகளும்

இஸ்லாமியக் கோட்பாடுகளின் படியே முஸ்லிம்களது வாழ்க்கை முறையும் வலியுறுத்தப்படுகிறது. புனித குர்ஆனினதும் 'சுன்னா' எனப்படும் நபி முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்க்கை வழிகாட்டல்களினதும்படியே முஸ்லிம்கள் பண்டிகைகளையும், சடங்குகளையும் நிறைவேற்ற வேண்டும்.

## ★ இஸ்லாமியப் பண்டிகைகள்

இஸ்லாம் முஸ்லிம்கள் மீது கடமையாக்கியுள்ள ஐம்பெரும் கடமைகளை அடிப்படையாகக் கொண்டு வருடத்தில் இரு பண்டிகைகள் கொண்டாடப் படுகின்றன. அவை

- நோன்புப் பெருநாள்
- ஹஜ்ஜுப் பெருநாள் ஆகியனவாகும்.

முஸ்லிம்கள் இவ்விரு பெருநாள் தினங்களிலும் புத்தாடை அணிந்து பள்ளிவாசல்களுக்குச் சென்று விசேட தொழுகைகளில் ஈடுபடுவதுடன் உறவினர் நண்பர் வீடுகளுக்கும் சென்று மகிழ்வார்கள்.

## ★ நோன்புப் பெருநாள்



உரு 8.13 முஸ்லிம் பள்ளிவாசல்

இது அரபி மொழியில் 'ஈதுல் பித்ர்' எனப்படும். இஸ்லாத்தின் நான்காவது கடமையாகிய புனித நோன்பை நிறைவேற்றிய பின்பு நோன்புப் பெருநாள் கொண்டாடப்படுகிறது. இஸ்லாமிய ஹிஜ்ரி ஆண்டுக்கணக்கின்படி எட்டாவது மாதமான ரமழான் மாதம் முழுதும் முஸ்லிம்கள் நோன்பு நோற்பது கடமையாகும். நோயாளிகள் பிரயாணிகள் போன்றோருக்கு நோன்பு நோற்காதிருக்க அனுமதியுண்டு. ரமழான் மாதம் தலைப்பிறை பார்த்து முஸ்லிம்கள் நோன்பை ஆரம்பிப்பர்.

அதற்கடுத்த ஷவ்வால் மாதத் தலைப்பிறையைக் கண்டு நோன்பை நிறைவு செய்வர். நோன்பு நாட்களில் பகல் வேளையில் எதுவும் உண்ணாது, பருகாது இரவுவேளைகளில் விசேட தொழுகைகளிலும் ஈடுபடுவர். நோன்பை நிறைவு செய்து அடுத்த தினத்தில் நோன்புப் பெருநாள் கொண்டாடப்படுகிறது. பசித்திருந்து நோன்பு நோற்பதன் மூலம் பிறரின் பசித்துன்பத்தை அறிந்து பிறருக்கு உதவுபவர்களாக முஸ்லிம்கள் மாறவேண்டும் என்பதே நோன்பின் தாற்பரியமாகும். இத்தினத்தில் ஏழைகளுக்குத் தான தர்மங்கள் செய்வார்கள்.

## ★ ஹஜ்ஜுப் பெருநாள்

முஸ்லிம்களின் இரண்டாவது பண்டிகை ஹஜ்ஜுப் பெருநாளாகும். இது இஸ்லாமிய ஹுஜ்ரி ஆண்டின் 12 ஆவது மாதமான துல்-ஹஜ் மாதம் 10 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. ஹஜ்ஜுப் பெருநாள் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் இறுதிக் கடமையாகிய புனித ஹஜ்ஜினை மையமாக வைத்துக் கொண்டாடப்படுகிறது.



உரு 8.14 புனித மக்காப் பள்ளிவாசல்

வசதிபடைத்த உலக முஸ்லிம்கள் புனித மக்காவுக்குச் சென்று துல்-ஹஜ் மாதத்தில் கடமைகளை நிறைவேற்றுவார்கள். ஆனால் ஹஜ்ஜுப் பெருநாளை உலகிலுள்ள எல்லா முஸ்லிம்களும் கொண்டாடுவார்கள். வரலாற்றில் இஸ்லாமிய வழிமுறைகளை உலகிற்குப் பரப்புவதில் இறை தூதர்களான இப்றாஹிம் (அலை), அவருடைய மகன் இஸ்மாஈல் (அலை), மற்றும் இப்றாஹிமுடைய மனைவி ஹாஜரா அம்மையார் ஆகியோர் மேற்கொண்ட தியாகங்களை நினைவுகூரும் முகமாகவே புனித ஹஜ்ஜுப் பெருநாள் - தியாகத்திருநாள் (ஈதுல் அழ்ஹா) முஸ்லிம்களால் கொண்டாடப்படுகிறது.

## ★ இஸ்லாமியச் சடங்குகள்

மேலே குறிப்பிட்டது போன்று முஸ்லிம்களின் வாழ்க்கை நடவடிக்கைகள் யாவும் அல்குர்ஆன், சுன்னாவின் வழிமுறைப்படியே அமைய வேண்டும். வாழ்க்கையில் நடைபெறும் சடங்குகள் இஸ்லாமியக் கோட்பாடுகளின் படியே நடைபெறுகின்றன. அதன்படி இஸ்லாமியர்களின் சடங்குகளாக பின்வருவனவற்றை காணலாம்.

குழந்தை பிறந்தவுடன் ‘அதான்’ சொல்லி வலது காதில் ஊதுவதுடன் இடது காதில் ‘இகாமத்’ சொல்லி ஊதவேண்டும். குழந்தை பிறந்து ஏழாவது நாள் குழந்தையின் தலைமுடியை நீக்கிப் பெயர் சூட்டுவது வழக்கம். குழந்தைக்கு நல்ல பொருள் தரக்கூடிய பெயர்களை வைப்பார்கள்.



உரு 8.15 இஸ்லாமிய திருமணசடங்கு

திருமணம் இஸ்லாமியக் கோட்பாடுகளின்படி நடைபெறும். மணமகனதும், மணமகளினதும் வீட்டார் பேச்சுவார்த்தை செய்து மணமகன், மணமகள் சம்மதத்துடன் திருமணம் நிச்சயிக்கப்படும். மணப்பெண்ணின் தகப்பன் அல்லது சிறிய தந்தை அல்லது சகோதரர் அல்லது உறவினர் எவரும் மணப்பெண்ணுக்கு இல்லையாயின் காதி நீதிவான் பிரதான சாட்சியாக இருந்து கதீப் (மார்க்க அறிஞர்) ஒருவர் நிகாஹ் திருமணச்சடங்கை நடத்திவைப்பார். திருமணத்திற்காக மணமகன் மார்க்கக்கட்டளைப்படி 'மஹர்' எனப்படும் பெண்ணுக்குரிய பங்கைக் கொடுத்துவிட வேண்டும். திருமணம் நடைபெற்ற பின் மணமகனால் அவர்களது உறவினர்களை அழைத்து 'வலீமா' எனும் விருந்துபசாரம் வழங்கப்படும்.

இஸ்லாமிய வழிகாட்டல்படியே முஸ்லிம்கள் மரணித்தபின் மரணச்சடங்கு மேற்கொள்ளப்படுகிறது. முஸ்லிம் ஒருவர் மரணித்தபின் மிகவும் தாமதிக்காது மரணித்தவரின் உடலைக் குளிப்பாட்டுதல், உடை அணிவித்தல் (கபனிடல்) மையத்துக்கான தொழுகையை நிறைவேற்றுதல், நல்லடக்கம் செய்தல் ஆகிய சடங்குகள் மேற்கொள்ளப்படும். இறந்தவருக்குப் பட்டு அல்லாத வெள்ளையுடையால் 'கபன்' செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இறந்தவர் ஆணாயின் ஆண்களும் பெண்ணாயின் பெண்களும் உடலைக் குளிப்பாட்டிக் கபனிடும் வேலையைச் செய்வர். தொழுகை நடத்தி அடக்கம் செய்வதில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுவர்.

### செயற்பாடு IV

இலங்கை முஸ்லிம்களின் சமய விழாக்கள் மற்றும் அவர்களது வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படும் சமயச் சடங்குகள் பற்றி கையெழுத்துப் பத்திரிகை ஒன்றை எழுதுங்கள்.

### ★ கிறிஸ்தவ கலாசாரத்தோடிணைந்த சமய விழாக்களும் சடங்குகளும்.

இலங்கையில் உள்ள கிறிஸ்தவர்களில் சிங்களவர்களும் தமிழர்களும் பெருமளவில் காணப்படுகின்றனர். இங்கு காணப்படும் கிறிஸ்தவர்கள் கத்தோலிக்கம், கத்தோலிக்கமல்லாதவர்கள் என்று வகைப்படுத்தலாம். இங்கு வாழும் தமிழ் கிறிஸ்தவர்களின் கலாசாரம் தமிழ்க் கலாசாரத்தின் செல்வாக்கிற் குட்பட்டதாகவும், சிங்கள கிறிஸ்தவர்களின் கலாசாரம் சிங்கள கலாசாரத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டிருப்பதையும் காணலாம்.

கிறிஸ்தவர்கள் பல விழாக்களை வருடந்தோறும் கொண்டாடுகிறார்கள். அவற்றுள் பின்வருவன இரு முக்கிய விழாக்கள் ஆகும்.

- இயேசு பிறப்பு விழா (கிறிஸ்மஸ்)
- இயேசு உயிர்ப்பு விழா (ஈஸ்டர்)

### ★ இயேசு பிறப்பு விழா

இறைவன் தன் ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பிய நாளாக இயேசுவின் பிறப்பு விழாவை கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள். உலகம் பூராகவும் டிசம்பர் மாதம் 25ந் திகதி கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்படுகிறது. மக்களைப் பாவவாழ்வில் இருந்து மீட்பதற்காக இயேசுவை இவ்வுலகத்திற்கு இறைவன் அனுப்பியதாக கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். அன்றைய தினம் புத்தாடை அணிந்து ஆலயத்திற்குச் சென்று ஆராதனைகளில் கலந்து கொள்வார்கள். கிறிஸ்மஸ் கீதங்கள் பாடுவார்கள். ஏழை எளியவர்களுக்குப் பரிசுப்பொருட்கள் கொடுத்து மகிழ்வார்கள். உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்ச்சியாக இயேசுவின் பிறப்பு விழாவை கொண்டாடுவார்கள்.



**உரு 8.16 இயேசு பிறப்பும் நத்தார் அலங்காரமும்**

## ★ உயிர்ப்பு விழா (ஈஸ்டர்)



**உரு 8.17 (i)**
**இயேசுவின் பாடுகள்**



**உரு 8.18 (ii)**
**இயேசுவின் உயிர்ப்பு**

சிலுவையில் அறையப்பட்டு, அடக்கம் செய்யப்பட்ட இயேசுகிறிஸ்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததை நினைவு கூரும் நாளாக கிறிஸ்தவர்கள் உயிர்ப்பு விழாவை கொண்டாடுகின்றார்கள். 40 நாட்கள் தவக்காலமாக அனுஷ்டித்து விரதமிருந்து வழிபாடுகளில் ஈடுபடுவர். தவக் காலத்தின் இறுதி வாரத்தை புனித வாரமாக அனுஷ்டிப்பார்கள். புனித வாரத்தின் வெள்ளிக் கிழமையே பெரிய வெள்ளி எனப்படுகிறது. அதனைத் தொடர்ந்து வரும் ஞாயிற்றுக்கிழமை உயிர்ப்பு விழாவாகக் கொண்டாடுவார்கள்.

## ★ கிறிஸ்தவ சமயச் சடங்குகளும் சம்பிரதாயங்களும்



**உரு 8.19 குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுத்தல்**

ஒரு குழந்தை பிறந்தவுடன் ஞானஸ்நானம் என்னும் சடங்கினை கத்தோலிக்க சமயத்தினர் செய்கின்றனர். பிறந்த குழந்தையை ஆலயத்திற்கு எடுத்துச் சென்று வழிபாடுகள் நடாத்தி குருவானவரால் ஞானஸ்நானம் வழங்கப்படுகிறது. ஞானஸ்நானம் மூலம் புதுவாழ்வு பெற்று இறைவனின் பிள்ளையாகுவதாக கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.

திருமணச் சடங்கானது ஆலயத்தில் திருப்பலியின் (பூசை) போது குருவானவரினால் சாட்சிகள் முன்னிலையில் நடைபெறுகிறது. இதனைப் பரிசுத்த உடன்படிக்கை எனவும் அன்பின் உடன்படிக்கை எனவும் நம்புகின்றனர். இவ் உடன்படிக்கை செய்யும் போது



உரு 8.20 கிறிஸ்தவ திருமண சடங்கு

ஆலயத்தின் மணி ஒலிக்கும். இன்னிசைக் கீதங்கள் பாடப்படும். பின்னர் உறவினர்களும், நண்பர்களும் மணமக்களை வாழ்த்தி பரிசுப் பொருட்களை வழங்குவார்கள்.

ஒரு கிறிஸ்தவர் நோயுற்று இருக்கும் போது 'நோயிற்பூசுதல்' என்னும் சடங்கினைச் செய்வர். இதன் போது குருவானவர்களும் கூடியிருப்போரும் நோயாளிக்கு சுகமும், மனஅமைதியும் கிடைப்பதற்கு செபிப்பார்கள். குருவானவர் நோயாளிக்கு பரிசுத்த தைலத்தை பூசி செபிப்பார். இதே போல் கத்தோலிக்கர் ஒருவரின் மரணச் சடங்கின் போது ஆலயத்திற்கு மரணமானவரின் உடலை எடுத்துச் சென்று குருவானவரால் வழிபாடுகள் நடாத்தப்பட்டு பின்பு நல்லடக்கம் செய்யப்படும்.

## சமயத் தலங்கள்



உரு 8.21 இந்துக் கோவில்

இலங்கையில் பௌத்தர்கள் தலதாமாளிகை, ஸ்ரீமகாபோதி, ஸ்ரீபாத, களனிவிகாரை, ருவன் வெலிசாய ஆகிய புண்ணிய தலங்களுக்கு சென்று வழிபாடுகளைச் செய்யத் தவறுவதில்லை.

இந்துக்கள் பிரதானமாக நல்லூர்க் கந்தசுவாமி கோவில், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், கதிர்காமம் உட்படப் பல புண்ணிய தலங்களுக்குச் சென்று பூசை வழிபாடுகளில் பங்கு கொள்கின்றனர்.

பௌத்தர்கள், இந்துக்களுக்குரிய புனித தலங்களைப் போல கத்தோலிக்கர்களுக்கும் மடுதேவாலயம், கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், தலவில புனித அன்னம்மாள் தேவாலயம் உட்பட பல ஆலயங்கள் காணப்படுகின்றன.



உரு 8.22 தலதா மாளிகை

இவ் ஆலயங்களுக்கு மக்கள் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் சென்று வழிபாடுகளில் பங்கு கொள்ளுகின்றனர். முஸ்லிம்களைப் பொறுத்தவரை மக்காவிலுள்ள க.ஃபத்துல்லா பள்ளிவாசல், மதினாவில் உள்ள மஸ்கிதுத் நபவி - நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் பள்ளிவாசல், மற்றும் ஜெருசலேத்திலுள்ள புனித பைத்துல் முகத்துஸ் பள்ளிவாசல் ஆகியனவே முக்கியமான யாத்திரைத் தலங்களாகும். அவர்கள் அங்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடுவர்.

ஒவ்வொரு சமயங்களுக்கும் புனிதத் தலங்கள் வெவ்வோறாகக் காணப்பட்ட பொழுதிலும் சமய வேறுபாடு இன்றி, இனவேறுபாடு இன்றி ஒரு சமயத்தவர் இன்னொரு சமயத்தலங்களுக்கும் சென்று வழிபடுவதனைக் காணலாம்.



உரு 8.23 கத்தோலிக்கத் தேவாலயம்

பௌத்தர்களும் இந்துக்களும் பொதுவாக கதிர்காமம், முன்னேஸ்வரம் போன்ற கோவில்களுக்கு சென்று வழிபடுவார்கள். அதே போல கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு சமய, மொழி இனவேறுபாடு இன்றி எல்லோரும் சென்று வழிபடுவதனை நாம் காணலாம். ஸ்ரீபாத எனப்படும் சிவனொளிபாதமலை இலங்கையில் சகல இன மத மக்களதும் புனிதப் பிரதேசமாகக் கருதப்படுகிறது.



உரு 8.24 இஸ்லாமியப் பள்ளிவாசல்

பல சமயங்களுக்கூடாகவும், பல புண்ணிய ஸ்தலங்களுக்கூடாகவும் கட்டியெழுப்பப்படும் பொது நோக்கங்கள் பலவாகும். அன்பு, கருணை, ஒற்றுமை, சமாதானம், பொதுநலன், அகிம்சை, முதியோரை மதித்தல், குருவுக்கு மரியாதை செய்தல், சமூகசேவை, கைவிடப்பட்டவர்கள், மற்றும் அனாதைகளுக்கு உதவுதல், பிறருக்கும் பிற சமயத்தவர்களுக்கும் மதிப்பளித்தல், சூழலைப் பேணல் ஆகிய விடயங்கள் சகல சமயங்களினதும் பொது எதிர்பார்ப்பாகும்.

## 8.5 தேசிய அபிவிருத்திக்கான ஒற்றுமை

பல்வேறு இனங்கள் வாழும் சமூகமொன்றிலே சமயம், மொழி, பழக்கவழக்கங்கள் வேறுபட்டுக் காணப்படும். ஒரே இனம், ஒரே மொழி, ஒரே சமயம் உள்ள சமூகமொன்றாயினும் கலாசாரத்தின் பல்வேறு வகைத் தோற்றங்களை காணலாம். இது மானிட சமூகத்தின் பொது அடையாளமாகும்.

ஒவ்வொரு நாட்டிலும் கலாசாரங்கள் வேறுபட்டுக் காணப்படினும் பெரும்பாலான ஒற்றுமைகளும் காணப்படும். இந்திய கலாசாரத்திலும் இலங்கையின் கலாசாரத்திலும் ஒற்றுமைகளைக் காணலாம்.

பண்டித வண பத்தேகம விமலவங்ச தேரர்

(ஆசிரியர் - ராஜகீய)

ஒரு நாட்டின் கலாசாரங்களுக்குள் ஒற்றுமைகளைப் போலவே வேற்றுமைகளும் காணப்படுகின்றன. இது எந்தவொரு கலாசார சமூகத்தினதும் பொது அம்சமாகும். இதன்படி பார்க்கும் போது கலாசாரத்தின் மூலம் தீர்மானிக்கப்படுவது மக்களுக்கிடையிலே சமாதானமேயன்றிக் குரோதங்கள் அல்ல.

கலாசாரம் உலக மக்களுக்கிடையே புரிந்துணர்வைக் கட்டியெழுப்ப உதவும் அத்திவாரமாக இருத்தல் வேண்டும்.

**விஞ்ஞானி அல்பட் ஐன்ஸ்டைன் (1879-1955)**

மனித சமுதாயத்திலே பல்வேறு கலாசாரங்கள் இருந்தாலும் இவ்வெல்லாக் கலாசாரங்களினதும் எதிர்பார்ப்பு மனித சமூகத்தின் முன்னேற்றமும் அபிவிருத்தியுமே ஆகும். ஒரு நாட்டின் பொருளாதார சமூக மற்றும் கலாசார முன்னேற்றம் என்பது நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் தமது தேவைகளை நிறைவு செய்து மகிழ்ச்சியாக தமது வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதாகும். அதாவது நாட்டின் வளங்கள் இன, மத, மொழி வேறுபாடு இன்றிச் சமமாகப் பகிரப்பட்டு எல்லா மக்களும் சமமாக நடத்தப்பட்டு ஏழை பணக்காரர் என்ற தன்மை நீங்கியிருக்கும் நிலையாகும். இதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியானது மேலும் மேலும் முன்னேற்றம் அடைந்து செல்லும். இவ்வாறான தேசிய அபிவிருத்திக்கு எமது கலாசாரங்கள் வழிகாட்டுகின்றன.

**‘‘தேசிய அபிவிருத்தி தேசிய கலாசாரத்தின் விம்பமே’’**

**கலாயோகி ஆனந்த குமாரசுவாமி**

சுனாமி அனர்த்ததின்போது இந்நாட்டின் சகல இன மக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டமை கலாசாரங்களின் பிணைப்பின் ஒரு வெளிப்பாடேயாகும். எனவே இலங்கை மக்களின் மேம்பாட்டுக்கு கலாசார புரிந்துணர்வு அவசியமாகும்.

கலாசாரம் ஒரு போதும் மானிடனை பிரிக்கும் ஒரு வேலியல்ல. ஒவ்வொருவருக்கிடையிலேயும் நட்புறவை ஏற்படுத்தும் ஒரு கருவியாக அமையும் எனக் குறிப்பிடலாம்.

எனவே ஒவ்வொரு சமூகமும் தத்தமது தனித்துவமான கலாசார அடையாளங்களைப் பேணி மதிப்பதைப் போல ஏனைய கலாசாரங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். இவ்வாறு கலாசாரங்களுகிடையேயான தொடர்பினால் இன, மத, மொழி வேறுபாடு நீங்கி எல்லோரும் ஒன்றாக செயற்படலாம். இதனால் எல்லோரினதும் பங்களிப்பும் தாய்நாட்டின் அபிவிருத்திக்கு உறுதுணையாக அமையும்.

நாட்டின் அபிவிருத்தியானது மக்களின் வினைத்திறன் மிக்க பொருளாதார செயற்பாடுகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது. எனவே வினைத்திறன் மிக்க பொருளாதார நடவடிக்கையில் மக்கள் ஈடுபடுவதற்கு ஒவ்வொருவரும் கலாசார பல்வகைமைக்கு மதிப்பளித்துச் செயற்பட்டுத் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு செயற்படும் பொழுது இனங்களுக்கிடையே சமாதானம், சகவாழ்வு ஏற்பட்டு தேசிய அபிவிருத்தி கட்டியெழுப்பப்படும்.

**செயற்பாடு V**

''தேசிய அபிவிருத்திக்குத் தேசிய ஒற்றுமையே அவசியம்'' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுங்கள்.

***சாராம்சம்***

- பல்வேறு கலாசார அம்சங்களை கொண்ட ஒரு சமூகம் பல்கலாசார சமூகம் எனப்படும்.
- இலங்கையும் ஒரு பல்கலாசார சமூகங்களைக் கொண்ட நாடாகும்.
- ஒவ்வொரு கலாசாரங்களிலும் பல்வேறு வகையான சடங்குகளும் பழக்கவழக்கங்களும், விழாக்களும் காணப்படுகின்றன.
- வேறுபட்ட கலாசாரங்கள் காணப்பட்ட பொழுதிலும் அவை நாட்டின் தேசிய அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு உதவுவதாக அமைதல் வேண்டும்.